# அண்ணமார்சாமி கதைப்பாடலில் கனவுகளும் நம்பிக்கைகளும்

**முனைவர்.அ.சக்திரம்யா**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**வேளாளர் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), ஈரோடு – 638 012**

28

ஆய்வு நோக்கம் – நாட்டுப்புற இலக்கியங்கல் கதைப்பாடல்களும் நம்பிக்கைகளும் பற்றி அறிதல்

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புற வழக்கில் நம்பிக்கை இன்றியமையாதது. நம்பிக்கையின் அடிப்படையில் தான் மானுடம் நகர்ந்து செல்கிறது. காலந்தோறும் நம்பிக்கையின் தன்மையில் மாற்றம் உள்ளதைக் கண்டுவருகிறோம்.மரபு சார்ந்த வகையில் நம்பிக்கை காரண காரியத்திற்கு இடம் கொடாமல் இன்று வரை பின்பற்றப்பட்டு வருகிறது. பெரும்பாலும் நம்பிக்கையும் கனவு மனம் சார்ந்து அமைகிறது. தெய்வ நம்பிக்கையில் கனவு இடம்பெறுகிறது. மேலும் கனவு நன்மை மற்றும் தீமை நிமித்தங்களில் பெரும்பங்கு வகிக்கின்றது. நாட்டுப்புற மக்களிடம் கனவுடன் தன்னுடைய நிகழ்வுகளைப் பொருத்திப் பார்க்கும் வழக்கம் உள்ளது. நல்ல கனவு தோன்றினால் நல்லது நடக்கும் என்று மக்கள் நம்பினர். எதிர்காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகளின் மறைமுகக் குறியீடுகளாகவோ அல்லது தொடர்புடைய நிகழ்வாகவோ கனவின் நம்பிக்கை அமைகிறது. நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் பண்பாட்டு அடிப்படையில் கனவு சார்ந்த நம்பிக்கைகள் அமைந்து உள்ளது. அண்ணன்மார் கதைப்பாடலில் அண்ணன்மாரின் தங்கை அருக்காணித் தங்கத்தின் கனவினைத் தொடர்ந்து அண்ணன்களின் வெற்றி அமைந்துள்ளது.

**முன்னுரை**

மனித மனங்களில் நம்பிக்கையானது மிக உயர்வான பங்கு வகிக்கின்றது. இப்புவியில் தோன்றியுள்ள உயிரினங்கள் ஒவ்வொன்றின் மனமும் எதாவது ஒன்றின் மீது நம்பிக்கை கொண்டுள்ளது. அவை சார்ந்து வாழக்கூடிய பகுதி, இனம் இவற்றின் தன்மையைப் பொறுத்து நம்பிக்கை வேறுபடுகிறது. மனித இனம் முதன் முதலில் தன்னுடைய மனதை மட்டுமே நம்புகிறது. இதில் கனவும் நம்பிக்கையும் வாழ்க்கையின் ஓர் அங்கம் இறை நம்பிக்கையில் கனவுகள் தான் சிறந்த வழிகாட்டியாக உள்ளது. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் தெய்வம் சார்ந்து அமையும் பொருட்டு கனவு அதனுடன் இணைந்து செயல்படுகிறது. ஒவ்வொரு இலக்கியங்களிலும் சமூகப் பண்பாட்டுப்பின்னணியில் நம்பிக்கை, கனவு சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளது. மனிதன் பகுத்துப் பார்க்கும் திறனைப் பெற்று மேன்மை அடைந்துள்ள நிலையிலும் நம்பிக்கை கனவுகளின் நிலைப்பாட்டினை தன்னுள் தக்க வைத்துத் தன் வாழ்க்கை நிகழ்வோடு சேர்த்து மேன்மையடைகின்றனர். அண்ணன்மார் சாமிக்கதைப்பாடல் கனவும் நம்பிக்கையும் கதையின் பண்பாட்டு நிலை மற்றும் அக்கால மக்களின் சமூகப் பின்னணிப் பொருண்மைகளைக் கூறும்

நாட்டுப்புற இலக்கிய மரபாக வலம் வருவதை இக்கட்டுரை பதிவு செய்கிறது.

**கனவு**

கனவு என்பதை மனிதன் தன்னுடைய மனதில் தோன்றும் எண்ணங்கள், செயல்கள் அடையும் குறிக்கோள்கள் எனப் பலவகையில் கூறலாம். மனதும் மூளையும் சார்ந்து வருவது கனவு எனக் கொள்ளலாம். **"நாம் செய்யும் எந்த ஒரு செயலும் தன்னிச்சையாக நடப்பதில்லை. நமது அனைத்து எண்ணங்களையும் செயல்களையும் ஆழ்மனது கட்டுப்படுத்துகிறது"**.[1] என்று சிக்மன் பிராய்டு கூறுகிறார். மனிதனின் மனதைப் பொறுத்தும் அவனுடைய எண்ணங்களைப் பொறுத்தும் கனவுகள் வேறுபடும். இவைகளின் பொருட்கூறுகளும் வேறுபடும். தன்னிச்சையாக வந்து செல்பவையல்ல. வாழ்க்கைக்கு முன் எச்சரிக்கையாகக் கூட கனவுகள் அமையலாம். இதனைக் கொண்டு நம் மக்கள் தங்களின் வாழ்க்கைச் செயல்களை வகுத்துக்கொண்டும் வாழ்ந்தும் பின்பற்றி வருகின்றனர்.

**கனவு விளக்கமும் அறிஞர்கள் கருத்தும்**

கனவு என்ற சொல்லிற்கு அகராதிகள் தரும் விளக்கங்கள் துணையாக அமையும்;. நம் நாட்டுப்புறத்தில் கனவு என்பதை "சொப்பனம்;" என்று கூறுவர். இலக்கியங்களில் பல்வேறு வகையில் நாம் பொருள் கொள்ளலாம். பொதுவாகக் கனவு என்பதற்கு மறத்தல், மயங்குதல், என்ற விளக்கங்களைக் கூறுகின்றனர் கனவுகள் மனிதன் தோன்றிய நாளில் இருந்து தொடர்ந்து வருபவை. கற்பனை+காட்சிகளைக் கனவாக கண்டு மகிழ்கிறான்.

பிளேட்டோ என்பவர் கனவினை **"பகுத்தறிவற்ற விலங்குகளின் மொழி"** என்று கூறுகிறார்.ஹோமர் **"கடவுளின் தூது"** என்று கூறுகிறார். ”கனவு நமது நனவு வாழ்வைக் காட்டுவதில்லை நம்மை நனவு வாழ்விலிருந்து விடுவிப்பதே கனவின் நோக்கமாக உள்ளது. நமது மனமும் சிந்தனையும் ஒரு பிரச்சனையில் மூழ்கி உள்ள போது அதைக் குறியீடுகள் மூலம் பிரதிப்பதாகக் கனவு உள்ளது" என பர்டாக் கூறுகின்றார் இவ்வாறு கனவுகள் குறித்து பல்வேறு அறிஞர்கள் கருத்துக் கூறியுள்ளனர். இலக்கியங்களின் வளர்ச்சியில் காலத்திற்கேற்றவாறு கனவுகளின் மரபுத்தன்மையும் மாற்றம் அடைந்துள்ளது. மனிதன் தன்னுடைய

**நம்பிக்கையும் மனக் கட்டுப்பாடும்**

நாட்டுப்புற நம்பிக்கைகள் மனிதன் செய்ய நினைக்கும் செயல்களின் நன்மையை உணரச் செய்கிறது. தவறு இழைக்கக்கூடிய நிகழ்வுகள் நடக்கா வண்ணம் இவை பாதுகாக்கின்றன. கட்டுப்பட்டு நிற்கும் பண்பினை வளர்க்கும்கூறு நம்பிக்கை. நமது வழக்காற்று நம்பிக்கைகள் ஒழுக்கங்களைப் பேணுவதாக அமைந்துள்ளது.

**”பொய் சொன்னால் நாமி கண்ணக்குத்திடும்"**

இதன் மூலம் பொய் சொல்வது பிள்ளைப்பருவத்தில் இருந்தே கட்டுப்படுகிறது. மனிதனின் அச்சம் காரணமாக நாட்டுப்புறநம்பிக்கைகள் பலவகையில் எழுந்துள்ளன. தன்னுடைய செயல்களால் ஏதேனும் பெரும் தீங்கைப் பெற்று விடுவோமா என்ற உணர்வுதான் நம்பிக்கைகளுக்கு உட்படுத்துகின்றன.சுயவாழ்வில்உயர்வானநிலையைப் பெற நினைக்கும் மனம் இதுபோன்ற கட்டுப்பாடுகளை நம்புகிறான்.

உள்ளம், உடல், உயிர், இம்மூன்றுமே நமது நம்பிக்கையின் தாக்கம் கொண்டு இயங்குகிறது. மனதினைக் கட்டுக்குள் வைக்கவும், குறிக்கோள்களை அடையவும், மனம் நம்பிக்கை என்னும் ஊன்றுகோலைத்தான் பிடிக்கிறது. மனதிற்குத் தன் அவாநிலையைத் தொடுவதில் தான் நிறைவு. அறிவுசார் நிலையில் சிந்தனை செய்யாது உள்ளம் சார் நிலையில் பற்றுக் கொள்வதே நம்பிக்கையாகும்.

**நாட்டுப்புற நம்பிக்கைகள்**

கல்வி கற்று ஞானம் வளர்ந்து உண்மை நிலையை ஆய்ந்து கண்டறியும் வழக்கத்தோடு இந்நூற்றாண்டு மானுடம் வளர்ந்தாலும் நம்பிக்கை என்ற மனம் சார்ந்த விஷயத்தில் இன்னும் நகர்ந்து சென்று கொண்டுதான் இருக்கிறது. நாட்டுப்புற மக்களிடையே ஊடுருவியிருக்கும் நம்பிக்கைகள் ஏராளம். காலம் காலமாக மக்கள் தங்கள் மரபுகளின் வழித்தோன்றல்களைப் பின்பற்றி வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழல விடுகின்றனர். வழக்காற்று நம்பிக்கைகளுக்கு ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை முன் வைப்பதில்லை. வாழ்வின் அவசியத் தேவைகளுக்கும், அவசர முடிவுகளுக்கும் இந்நாட்டுப்புற நம்பிக்கைள் துணையாக நிற்கின்றன.

**கனவும் நம்பிக்கையும்**

நாட்டுபுற மக்களின் வாழ்க்கைச் சூழலில் நம்பிக்கை இன்றியமையாது. இது போலவே கனவும் அமைந்துள்ளது. தன்னுடைய இயல்பான வாழ்க்கை நிலையில் நிகழக்கூடிய நிகழ்வுகளைக் கனவுடன் இணைந்த நம்பிக்கையாகப் பார்க்கின்றனர். தனக்கு வரக்கூடிய இன்னல்களைப் பற்றிய முன் நிகழ்வாகக் கனவும், இதன் மூலம் தான் பாதுகாக்கப்படுவதாக நம்புகின்றனர்.கதைப்பாடலில் மனிதன் பலவகையில் தன்னுடைய நம்பிக்கையைக் கொண்டு தன்னை, தன் குழுவைக் காக்கும் தலைவனைத் தெய்வமாக்குதல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளது.

**கதைப்பாடல்களின் மரபுகள்**

நமது மரபுகளின் வழித்தோன்றல்களில் கதைப்பாடல்கள் பெருமளவு உருவம் கொண்டு வளர்ந்து வந்துள்ளது. காப்பிய வடிவில் அதன் போக்கு மக்களிடையே வடிவம் கொண்டு கதை கேட்பதோடு நில்லாமல் அதன் காட்சிகளைக் காணும் வகையிலும் இடம் பெறுகிறது. இதன் வாயிலாக நாம் பின்பற்றி வரும் மரபுகளில் நம்பிக்கையும், கனவும் இன்றியமையாதது ஆகும்.

**கதைப்பாடலில் கனவு**

கனவு, நிமித்தம், குறிசொல்லுதல், சகுனம் பார்த்தல் போன்றவை சமூகத்தில் பின்பற்றப்படும் மரபுகள். இதில் கனவு என்பதைச் சொப்பனம் என்று கூறுவர். முத்துப்பட்டன் கதை, கட்டபொம்பன் கதை ஆகியவற்றிலும் கனவுக் காட்சிகள் இடம்பெறுகின்றன. அண்ணமார் சுவாமி கதைப் பாடலில் அருக்காணித் தங்கத்தின் கனவுக் காட்சிகளைக் கொண்டே கதை நகர்கிறது. ஏராளமான கனவுக்காட்சிகள் தெய்வவாக்காக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தெய்வநிலையாக இன்றும் போற்றப்பட்டு வரும் இக்கதைப்பாட்டின் கனவுக் காட்சிகள் மக்களிடையே நீங்கா இடம் பெற்றுள்ளன. அண்ணமார்சாமி கதை என்ற சக்தி கனலின் நூல் இவைகளைப் புலப்படுத்துகின்றது.

**தங்கை சொப்பனம் காணுதல்**

அண்ணன்மாரின் தங்கை தன்னுடைய அண்ணன்களை தலையூர் காளி சேவல்கட்டு சண்டைக்கு அழைப்பு விடுத்துள்ளதை அறிகிறாள். இந்த சேவல்கட்டு சண்டையின் பொருட்டு அண்ணன்மார்களிடம் ஏதோ சூழ்ச்சி இழைத்து வஞ்சகம் வந்து சேர இருப்பதைச் சொப்பனம் மூலம் காண்கிறாள்.

**"அண்ணாருடன் பிறந்த அருக்காணி நல்ல தங்கம்**
**பொன்னாருடன் பிறந்த மேடையில் தங்கையரும்**
**அன்னலூஞ்சல் தூரியிலே அசந்து நித்திரை செய்கையிலே**
**பொன்னூஞ்சல் தொட்டியில் பொய்யுறக்கம் தூங்கையிலே**
**பொல்லாத சொப்பனமும் பொன்மயிலி கண்டுவிட்டாள்"1**

இவ்வாறு அருக்காணித் தங்கம் சொப்பனம் கண்டாள்.

**"ஆகாத சொப்பனமும் அருங்கிளியும் தானுங்கண்டு"**

தன் அண்ணன்களுக்கு வரக்கூடிய தீமைகளை முன்னரே அறிந்து சேவல் சண்டையில் வெற்றி பெறச் செய்கிறாள்.

**"என்று தங்கை சொல்ல கையிருந்த முட்டையுந்தான்**
**தாண்டிக் குதித்துத் தரையில் விழுந்திடுமாம்**
**முட்டை சிதறியதும் முத்து நிறச் சாவல் ரெண்டு**
**கால் இரண்டும் பச்சைநிறம் கடையிறகு தங்கநிறம்"2**

அருக்காணித் தங்கத்தின் சொப்பணத்தை நம்பியே அருள்வாக்கினால் தலையூர் காளியின் சேவல் தோல்வி அடையச் செய்தது.

**கிளி இருக்கும் இடம் கூறல்**

அண்ணன்மாரின் தங்கை தாய் தகப்பன் இறந்து போனதால் அருக்காணிக்கு இந்தக் கவலை மறப்பதற்கு கிளி,மயில், புறா போன்ற பறவை இனங்களுடன் விளையாடுவதற்கு விருப்பப்பட்டாள். தன் அண்ணனிடம் இந்தத் விருப்பத்தைக் கூறவே, நான் எந்த மலையைச் சென்று பிடித்து வர ஆணையிடு தாயே என்று கூறுகிறார்.

**"வீரமலைக்கிளியானால் அண்ணா விளையாட நல்லகிளி...**
**அடர்ந்தது பலாமரம் இருண்டகொரு சோலையது...**
**அதிலேராமலட்சுமணரென்றுஅன்னக்கிளிகளுண்டு**
**, அன்னக்கிளிகொண்டுவந்தால்சுருகிருந்து பேசுமண்ணா.."3**

இவ்வண்ணம் அருக்காணித் தங்கம் தனக்கு வேண்டிய கிளி இருக்கும் இடத்தையும் அதன் அடையாளத்தையும் கூறுகிறாள். இதனைப் பின்பற்றியே பொன்னர் சங்கர் இருவரும் கிளியைப் பிடிக்க வீரமலை சென்று பிடித்து வந்தனர்.

**அண்ணன்களின் ஆபத்தை அறிவிக்கும் சொப்பனம்**

சின்னண்ணன், பெரியண்ணன் இருவரும் போருக்கொருவர், சத்தியம் நிறைவேற்ற ஒருவர் என இருவேறு இடங்களுக்குச் சென்று இருந்த வேளையில் நீண்டநேரம் திரும்பாமல்

இருப்பதனால் தங்கைக்குக் கலக்கம் தோன்றியது. பொய்யுறக்கம் உறங்கவே சொப்பனங்கள் காண்கிறாள். கண்ட காட்சிகள் அனைத்தும் ஆகாத சொப்பனமாக இருந்தது.

**"அனந்தம் செய்யும் வேளையிலே ஆதேசம் கண்டாளே**
**கண்டாள் தெரிசனைகள் தன்னுடைகண்கள்**
**விழி கொள்ளாமல் ஆதேசங் கண்டு தங்கை அதிதுரிதாய்த்**
**தானெழுந்து......."4**

பொன்னர் அன்னன் மரநாழியை நிரூபிக்க சத்தியம் செய்யப் போன இடத்தில் சதிசெய்து ஏதேனும் பிழைகள் நிகழ்ந்து இருக்குமோ? போருக்குப் படதிரட்சச் சென்ற சங்கங்களுக்கு மோசமான நிகழ்வு நடந்திருக்குமோ? என்று கலங்கியபடி அண்ணிகளிடத்தில் கூறுகிறாள்.

**"ஐந்நூறு பிராமணர்கள் அழுத்தமிட்ட மங்கிலியம்**
**ஓமப்புகையினில் உத்தரித்த மங்கிலியம்.........."5**

ஐந்நூறு சான்றோர்கள் கூடி இருந்து செய்த மாங்கல்யம், வேள்வித்தீயில் புனிதமடைந்த மாங்கல்யம் அறுந்துவிழக் கனாக்கண்டேன்!

**" பாலைசிதறி பருமணவில் பூத்தாற்போல்........"6**

அண்ணியாரின் தாலி சிதறி கீழே விழுவது போல் நான் கனா கண்டேன். மேலும் வீரமலையில் ஐந்து எருதுகள் அதில் ஒன்று வாழக்கண்டேன். வெள்ளைச்சலகிருது வேறுபட்டு போகக்கண்டேன். நாலுசலகிருது புலியின் பால்பட்டு நடுவனத்தில் சோரக்கண்டேன் எனவும் கூறுகிறாள். அண்ணன்களும் அவருடைய தோழர்களும் இறந்து போவதைக் குறிப்பாகக் காட்டும் காட்சி இது.

**அண்ணனை நினைத்து தங்கை புலம்புதல்**

**"ஆண்மையில் அம்புபட்டு இறந்து போவதும்**
**பெண்மையில் பிரிவுகாளாது வேறுபட்டுப்"7** பிரிந்து போய் புலம்புவதும், இது அண்ணன்மார் இறப்பதும் அருக்காணித் தங்கம் புலம்புவதுமாக அமைகிறது. பசுவைவிட்டுக் கன்று இறந்துபோக பசு பதைக்கும் காட்சியும், ஆனைகட்டும் இடம், குதிரைகட்டு இடங்கள் தீ பிடித்து எரிவது அண்ணன்களைப் பிரிந்த அண்ணியர் தீயிட்டு இறந்து போவதைக் குறிக்கிறது.

கனவு காணுதல் இக்கதைப்பாடலில் பெரும்பங்காக அமைகிறது. தன்னுடைய அண்ணன்களுக்கு நடந்த வெற்றி மற்றும் எதிர்மறை நிகழ்வுக்கு முன்னோட்டமாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை முன்னரே கண்டு அதனுடன் பொருத்திப் பார்த்துத் தனக்கு நடக்கும் கெட்ட நிகழ்வில் இருந்து தற்காத்துக் கொள்ளும் நம்பிக்கையும் உள்ளது. கதைப்பாடல்களில் இவ்வழக்கம் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இக்கதைப்பாடலின் வளர்ச்சியில் அருக்காணித் தங்கத்தின் கனவும் நம்பிக்கையும் துணைநிற்கிறது. இறுதி நிலையிலும் கனவுக்காட்சிகள் கதையின் முடிவு நிலையைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

**அண்ணன்மார் கதையில் கனவு காட்சிகள்**

வளர்ச்சி நிலையில் நன்மைதரும் முடிவு நிலையில் தீமை தரும் காட்சிகள் இடம்பெறுகிறது. வெற்றியை அடைதல் கதையின் துன்ப நிலை **கனவு + நம்பிக்கை** சொப்பனங்கள்

வாயிலாகக் காணப்படும் தீய நிகழ்வுகளும், நேர்மறைக் குறியீடுகளைப் பொறுத்து அடுத்து நடக்கவிருக்கும் நிகழ்வுகள் தீர்மானிக்கப்படுகிறது. கனவுகளை நம்புவதின் மூலமாக இம்முடிவுகள் பதிவுசெய்யப்படுகின்றன. இது இறைநம்பிக்கையாக அமைகிறது மக்கள் காலம் காலமாக இக்கதைப்பாடலைக் கேட்டும். இதன்படி வாழ்ந்தும் வருவதால் மரபு நம்பிக்கையின் தேடல்களைத் தொடரும் பொருட்டு ஆய்வுகளை அமைக்கலாம்.

**முடிவுரை**

குழுவாக வாழ்ந்த மனிதன் தனக்குள் உருவாகும் அனைத்து எண்ணங்களுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்புக்கும் உயிர் கொடுத்து வந்தான். தன்னுடைய இனங்களைக் காப்பதில் அதீத ஈடுபாடு காட்டினான். மனதளவில் ஏற்றத்தாழ்வு இன்றி பகிர்ந்து வாழ்ந்து வந்தவனுக்கு இயற்கையின் மீது பெரும் நம்பிக்கையும் தெய்வத்தின் மீது பாசமும் வந்தது. தன்னைக் காக்கும் அனைத்தையுமே நம்பினான். இவ்வகையில் அண்ணமார் சாமி கதைப் பாடலில் அருக்காணியின் கனவினை நம்பினர். அச்சூழலில் இவருடைய சொப்பனம் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளது என்பதை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

அடிக்குறிப்புகள் :

1. அண்ணமார் சாமி கதை - சக்தி கனல்
2. . மேலது
3. மேலது
4. மேலது
5. மேலது
6. மேலது
7. மேலது

துணை நூற்பட்டியல்

1. அண்ணமார் சாமி கதை,சக்தி கனல், வெளியீடு - வு.ளு. ராமலிங்கம்,நர்மதா பதிப்பகம், சென்னை -17 – இரண்டாம் பதிப்பு 1994
2. நாட்டுப்புறவியல் கதைப் பாடல்கள், முனைவர் - பி.புஷ்பா, தமிழ்த்துறை, இராணிமேரி கல்லூரி, சென்னை - 600 004.
3. இணையப் பயன்பாடுகள், Tamil w.com,keetru.com / index.php/2018, akaramuthala.in
4. சிக்மண்ட் பிராய்டு, The Interpretation of dreams